பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4

20 05 2024 **MONDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கான ஐந்தாம் கட்டத்தேர்தலில் 57 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2. அண்டை மாநிலங்கள் தடுப்பணை கட்ட மேற்கொள்ளும் முயற்சிகளை தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

3. குறுவை சாகுபடி தொகுப்புத்திட்டத்தை மாநில அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று பாமக கோரியுள்ளது.

4. வங்கக்கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

---- *இனிவிரிவானசெய்திகள்* ----

**<<<<<>>>>>>**

மக்களவைக்கான ஐந்தாம் கட்டத்தேர்தலில் 57 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆறு மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 49 தொகுதிகளில் இந்த தேர்தல் பொதுவாக அமைதியாக நடைபெற்று முடிந்ததாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மாலை ஐந்து மணி நிலவரப்படி, அதிகபட்சமாக மேற்குவங்கத்தில் 73 சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக மகாராஷ்ட்ராவில் 49 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

ஜம்மு காஷ்மீரில் 54 சதவீதமும், பீகாரில் 52 சதவீதமும், ஜார்கண்டில் 62 சதவீதமும், லடாக்கில் 67 சதவீதமும், ஒடிஷாவில் 61 சதவீதமும், உத்தரப்பிரதேசத்தில் 56 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை தேர்தல் நடைபெற்று வருகிறது.

இதுவரை, நான்கு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் 66 புள்ளி ஒன்பது ஐந்து சதவீத வாக்குகள் பதிவாயின.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையே, எஞ்சிய இரண்டு கட்டத்தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

<<<<<>>>>>>

ஏழ்மையை அகற்ற 60 ஆண்டுகளாக ஆட்சிப்பொறுப்பில் இருந்த காங்கிரஸ் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்குவங்கத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பெற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைள் காரணமாக உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து பிஜேபி தவறான தகவல்களை மக்களிடம் பரப்பி வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு பவன் கேரா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனில் அக்கறை இல்லாமல் அரசியலுக்கு மட்டுமே பிஜேபி முக்கியத்துவம் கொடுப்பதாக தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளை முடக்கும் செயல்களில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்படுவதாகவும் திரு பவன் கேரா குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>>

அண்டை மாநிலங்களில் தடுப்பணை கட்டுவதை தடுத்து நிறுத்த தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர அரசுகள் தடுப்பணை கட்ட முயற்சிப்பதை சுட்டிக்காட்டினார்.

தமிழகத்திற்கு வரும் தண்ணீரை தடுப்பதில் அண்டை மாநிலங்கள் குறியாக உள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இப்பிரச்சினையில் தமிழக அரசு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அம்மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

மேட்டூர் அணை குறித்த காலத்திற்குள் திறக்கப்பட வாய்ப்பில்லாததன் காரணத்தினால் குறுவை சாகுபடிக்கான தொகுப்புத்திட்டத்தை தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி பாசன பகுதிகளில் போதிய தண்ணீர் கிடைக்காததன் காரணமாக கடந்த ஆண்டு குறுவை, சம்பா, தாளடி ஆகிய மூன்றுபோக பயிர்களும் கடுமையாக பாதிக்கப்படடதாக குறிப்பிட்டுள்ளார்.

நடப்பாண்டில் இதுபோன்ற பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு குறுவை தொகுப்புதிட்டம் அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வேளாண் பணிகளுக்கு 24 மணிநேரமும் மும்முனை மின்சாரம் கிடைப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு ராமதாசு கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் அதிபர் டாக்டர் **Seyed Ebrahim Raisi** -க்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை ஒருநாள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அரசு அலுவலக வளாகங்களில் தேசியக்கொடி நாளை அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும், கேளிக்கை நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படுவதாகவும் மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

வங்கக்கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடல் பகுதிகளில் பலத்த காற்றுவீசக்கூடும் என்றும் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று பிற்பகல் மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக, மூங்கில் காடு கிராமத்திற்கு செல்லக்கூடிய ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திண்டுக்கல் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை ஆட்சியர் திருமதி பூங்கொடி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------------

தருமபுரி மாவட்டம் தடங்கம் ஊராட்சி அருகே சேலம் - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை மேம்பாலம் அருகே மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்குவது குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி வளர்மதி தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------------

நாமக்கல் மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கையின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் நடைபெற்றது.

---------------------

திருப்பூர் மாவட்டம் முட்டிகாலம்பதி கிராமத்தில் மழைநீரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருட்களை வருவாய்த்துறையினர் வழங்கினர்.

----------------

சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களை சேர்ந்த அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இளம் விஞ்ஞானி பயிற்சி முகாம் சேலத்தில் இன்று தொடங்கியது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜப்பானின் **Kobe** -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் ஓட்டப்பிரிவில் இந்தியாவின் **Deepthi Jeevanji** தங்கப்பதக்கத்தை வென்றார்.

ஆடவர் வட்டு எறிதலில் **Yogesh Kathuniya** வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 13-ஆவது இடத்தில் உள்ளது.

---------------

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Annu Rani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் **Sandeep Singh, Arjun Babuta** ஆடவர் பிரிவிலும், **Ramita Jindal, Elavenil Valarivan** மகளிர் பிரிவிலும் தகுதி பெற்றுள்ளனர்.

--------------

ஆசிய தொடர் ஓட்டப்போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் இன்று தொடங்கிய இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**<<<<<END>>>>>>**